# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 சுறவம் நல்லோரை பங்குனித் திங்கள் 29ம் நாள் (12-04-2025 சனிக்கிழமை) வெளியீடு +94 21 222 9722



## புதுப்பொலிவுடன் அருள்மிகு மாவிட்டபுரம் கந்தசுவாமி திருக்கோயில்

படம் : சற்குணராசா நிதர்சன் (GL Tharshan)

# அருள்மிகு உத்தரகோசமங்கை திருக்குட நன்னீராட்டு






# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.     www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# இளவேனில் சித்திரையே தமிழர் வருடப்பிறப்பு

இம்முறை சித்திரைத் திங்கள் முதலாம் நாள் (14-04-2025) “உலக நிறைவு” (விசுவாசுவ) ஆண்டு, அதிகாலை 2.29 மணிக்குப் பிறக்கிறது. இது மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2299 ஆல் குறிக்கப்படும். அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

தமிழர் வருடப்பிறப்பு தைத்திங்களா அல்லது சித்திரையா என்று பல கேள்விகள் , பல கதைகள், பல அரசியல் முன்னெடுப்புகள் என்று தமிழரின் ஆழ்ந்த அறிவியலை அறியாமல் எழுந்தமானமான பல செய்திகள் இந்த நூற்றாண்டில் பரவியுள்ளது. தமிழரின் வானியல் மற்றும் கணித அறிவின் ஆழத்தினை இன்னும் சரியாக மற்றும் முற்றாக அறியாமல் , தமிழையும் சமயத்தினையும் வேறுபடுத்தி, தமிழைச் சமயத்தில் இருந்து கழற்றி அதை வைத்து அரசியல் இலாபம் தேடுபவர்களின் கூற்றுகளில் குறுகித் தொலையாமல், ஆழச் சிந்தித்து , அறிவியலுடன் இணைத்து தமிழரின் மரபினை உன்னிப்பாக ஆராய்ந்து , உலகின் அதியுயர் அறிவியலைக் கொண்டு வாழ்ந்தவர்கள் என்ற பெருமையுடன் அணுகி உங்கள் சிந்தனைகளைத் துலக்கிக்கொள்ளுங்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் ஆறு காலங்களான இளவேனில், முதுவேனில், கார் காலம் , கூதிர் அல்லது குளிர் காலம், முன்பனி, பின்பனி என்பவற்றில் முன்பனிக் காலமான தையில் மற்றும் பின்பனி மாசியில் அறுவடைகள் நடைபெறுகின்றன. தைப்பொங்கல் தமிழ்ப் புத்தாண்டல்ல, பண்பாட்டின் அரும்பெரும் தொடக்கமான விவசாயத்தின் அறுவடையை கொண்டாடும் நன்னாள். விலங்குகள் போல் அலைந்து திரிந்த மனிதன் விவசாயத்தின் பெயரில் ஓரிடத்தில் நிலையாகினான். நிலையான தமிழனை குடியானவன் என்றோம். அதிலிருந்தே பண்பாட்டு வளர்ச்சி ஆரம்பமாகியது. எமது பண்பாடே உலகின் முதற்பண்பாடு.

இந்நன்னாளில் உழவர்களையும் அவர்களுக்குத் துணைநின்ற விலங்குகள், மேலாக ஐம்பூதங்களின் வடிவங்களான நிலம் , நீர் , ஒளி தரும் அருக்கன் அதற்கும் மேலாக அருக்கனில் சோதி அமைத்தவனாகிய ஐம்பூதங்களில் உள் நின்று இயக்கும் இயவுளாகிய சிவபெருமானையும் நினைந்து நன்றி பாராட்டி, வணங்கி மகிழ்ந்தெழும் ஆனந்த நன்னாளாகும்.

தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்” சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாள், தமிழ்ப் புத்தாண்டாகக் கடைப்பிடிக்கப்பட்டு இந்நாளே தமிழர் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. கிழக்குப் பார்த்த கோயில்களில் இந் நாளில் மூலவருக்கு சூரிய ஒளி நேரே படும் வண்ணமே கோயில்கள் கட்டப்பட்டன.

**வானவர்கள் மலர் மாரி மண் நிறைய விண் உலகின்**
**மேல் நிறைந்த ஐந்து பேரிய ஒலியும் விரிஞ்சன் முதல்**
**யோனிகள் ஆயின எல்லாம் உள் நிறைந்த பெரு மகிழ்ச்சி**
**தான் நிறைந்த சித்திரையில் சதயம் ஆம் திருநாளில்**

இதில் அப்பர் சுவாமிகள் முத்திபெற்ற சித்திரைத் திங்களை சேக்கிழார் சுவாமிகள் மேல்வருமாறு விபரிக்கின்றார்.

சித்திரையே எங்கள் புத்தாண்டு. இதனை அரைகுறை மேலெழுந்த செய்திகளை நம்பி தொலைத்து விடாமல், அறிவியலின் ஆழத்தினை பறைசாற்றும் சித்திரையை இறுகப்பற்றி, எங்கள் புத்தாண்டினை வரவேற்று, மலர்கின்ற புதிய ஆண்டில், எல்லா செயல்களும் இறைவனருளால் சிறப்புற அமைய வேண்டி நிற்போம்.



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம்.   www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(12-02-2025) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 29ஆம் நாள் அன்று (13-03-2025 வியாழக்கிழமை) ஐம்பத்து ஐந்தாவது தென்னாடு திங்கள் செய்தி யிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறி சற்குணராசா ஐயா அவர்கள், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சிவத்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் ஐயா அவர்களும் அவரது துணைவியாரும், மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயில் தர்மகர்த்தா சபையின் தலைவர் சிவத் திரு. தம்பிராசா தருபாகரன் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இந்நிகழ்வில் துணைவேந்தர் ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அதி பர் சிவத்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் ஐயா அவர்களுக்கு முதல் இதழினை வழங்கி, தென் னாட்டின் ஐம்பத்து ஐந்தாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்திருந்தார்.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக, யாழ்ப்பாணத்தின் சைவ வளர்ச்சியில் பெரும்பங் கினை ஆற்றிவரும் பாடசாலையான, யாழ்ப்பா ணம் இந்து ஆரம்பப் பாடசாலையின் ஆளுமை பணியை ஆற்றி, தனது அறுபதாவது அகவை யில் ஒய்வுடன் விடைபெறும் சிவத்திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் ஐயா அவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

(22-03-2025) – ஒசுத்திரேலியா சிட்னியில் செந்தமிழ் வேதம் ஓதி செல்வன். தனுசாந்த் அத் விக் என்ற குழந்தையின் பிறப்பின் துடக்கு நீக்கல் வழிபாடுகள் ஆற்றி வைக்கப்பட்டது. அன்றைய நாளில் குழந்தையின் மற்றும் பெற்றோரின் நலம் வேண்டி திருமுறைகள் சேர்ந்திசைத்து இறைவ னிடம் விண்ணப்பங்களும் வைக்கப்பட்டு சிறப்பாக ஆற்றி வைக்கப்பட்டது.

வழிபாடு என்பது உணர்வுடன் சேர்ந்து நிற் கிறது. தாய்மொழியில் இறைவனை வழிபாடு செய்யும்போது கிடைக்கும் பேரானந்தம் ஒப்பற்றது என்பதை செய்தால் மட்டுமே உணரமுடியும். அந்த வகையில் தமிழை வாழ்வியல் சடங்குகளிலும் கொண்டுவரவேண்டும் என்ற தென்னாட்டின் குறிக் கோளினை ஒசுத்திரேலியாவிலும் எடுத்துச்செல்ல வேண்டும் என்ற நோக்குடன் இச்செயற்பாடுகள் முன்னேடுக்கபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(27-03-2025) – பங்குனித் திங்கள் தேய் பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(31-03-2025) – தவத்திரு. செல்லப்பா சுவாமி கள் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(04-04-2025) – அமரர். சின்னத்துரை தையல் நாயகி அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் இடம்பெற்றன.

(07-04-2025) – தவத்திரு. யோகர் சுவாமிகள் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

(10-04-2025) – பங்குனித் திங்கள் வளர் பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற் றன.

**திருச்சிற்றம்பலம்**

# அமரர். கந்தையா நீலகண்டன் ஐயா அவர்களின் நினைவுப் பேருரை




அகில இலங்கை இந்து மாமன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர். கந்தையா நீலகண்டன் அவர்கள் அமரத்துவ மெய்திய ஏழாவது வருட நிறைவின் நினைவாக நடாத்தும் நினைவுப் பேருரை நிகழ்வு, கடந்த பங்குனித் திங்கள் 16ஆம் நாள் (30-03-2025) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. நிகழ்வானது அகில இலங்கை இந்து மாமன்ற தலைவர் திருமதி அ. கயிலாசபிள்ளை அம்மையார் தலைமையில் இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் அருளாளர்கள், சைவப் பெருந்தலைவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணி சிவத்திரு. வி.புவிதரன் PC அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதோடு, **“இந்து ஆலயப்பிணக்குகளைத் தீர்க்க தர்ம நம்பிக்கைச் சட்ட ஏற்பாடுகள் போதுமானவையா?”** எனும் பொருளில் நினைவுப் பேருரையையும் ஆற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**அமரர். கந்தையா நீலகண்டன் அவர்கள் பற்றிய குறிப்பு**

பல்துறை ஆற்றலும் ஆளுமையும் கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் அமரர். சட்டத்தரணி கந்தையா நீலகண்டன் ஐயா அவர்கள், 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி 18ம் தேதி ஆண்டு தனது 71வது அகவையில் இறைவன் திருவடியில் சென்று அமைதியடைந்தார். வடமராட்சியில் பிறந்த அவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மற்றும் இலங்கை சட்டக் கல்லூரியில் கல்வி கற்று எழுத்து, சமய, சமூக, கல்வி, மற்றும் சட்டத்துறைகளில் சிறந்து விளங்கியவர். கொழும்பில் தனது வாழ்நாளின் பெரும்பகுதியை சமூக, சமய நலப்பணிகளில் அர்ப்பணித்தவர்.

அகில இலங்கை இந்து மாமன்றத்தில் துணைச் செயலாளர் முதல் தலைவர் வரையில் பல பொறுப்புகளை வகித்தவர். மேலும் இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் திறக்கச் செய்ததோடு, மாணவர்களுக்கு இலவச விடுதி, உணவு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தவர். சைவப் பாடசாலை மாணவர்களுக்காக பாடநூல்கள் தயாரிக்கவும், கல்வி வாய்ப்புகளைப் பாதுகாக்கவும் வழிகாட்டியாகவும் இருந்தவராவார். இவ்வாறு பல பணிகள் ஆற்றி, சமயமும் சமூகமும் ஒன்றென்று நம்பி வாழ்ந்து மறைந்த பெருமகனாரின் ஏழாவது நினைவு ஆண்டில் அவரைப் போற்றுவதோடு, வணங்கியும் மகிழ்கிறோம்.

**திருச்சிற்றம்பலம்**

# பதுளை லியாங்காவளை தோட்டத்தில் இடம்பெற்ற திருவாசக முற்றோதல் நிகழ்வு

கடந்த 16-03-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று, பதுளை பண்டாரவளை நகருக்கு அருகாமையில் அமைந்துள்ள லியாங்காவளை தோட்டத்தில், 1909ம் ஆண்டு முதல் அருள்புரிந்து வரும் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயிலில், அறநெறி ஆசிரியர்களால் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சிறப்பாக நடாத்தப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் அறநெறி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அடியார்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

தமிழ் பேசும் மக்கள் குறைந்து வாழும் பகுதியான, மலையக பிரதேசத்தில் பன்னிரு சைவ சமயத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக விளங்கும் ‘திருவாசகத்தை’ முற்றோதல் செய்துள்ளமை, சைவத்தமிழ் மரபுகளை, அடுத்த தலைமுறையினருக்கு கடத்தும் நோக்குடன் பதுளை லியாங்காவளை தோட்ட மக்களால் முன்னெடுக்கப்பட்ட போற்றுதலுக்குரியசெயற்பாடாக அமைகிறது.

இந்த நிகழ்வினை திருக்கோயில் நிர்வாகத்தினர், அர்ச்சகர்கள் மற்றும் தோட்ட பொது மக்கள் இணைந்து ஒழுங்குபடுத்தி முடித்துள்ளனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு திருவாசக நூல்களுடன் அன்னதானம், சிற்றுண்டி என்பனவும் வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



**திருச்சிற்றம்பலம்**

# சிறப்புச் சொற்பொழிவு – சிவஞானபோதமும் மெய்கண்டார் மரபும்

மு. ஆனந்தகிருஷ்ணன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், **“சிவஞான போதமும் மெய்கண்டார் மரபும்”** என்ற தலைப்பில் சென்னையில் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வானது வருகின்ற ஏப்ரல் 17ம் ஆம் தேதி அன்று, மாலை 5.30 மணி யளவில், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இடம்பெறத் திட்டமி டப்பட்டுள்ளது.




நிகழ்வில் முற்கால சைவத்தின் மெய்யியல் போக்கையும், 13ஆம் நூற்றாண்டிற்கு பின்னர் சைவ மெய்யியல் மரபில் ஏற்பட்ட மாற்றங்களில் மெய்கண்ட தேவரின் பங்களிப்பையும், அவர் இயற்றிய சிவஞான போதத்தின் சிந்தனை மரபையும், எளிமையான நடையில் சிவத்திரு. செ. முருகவேள் (நூலாசிரியர்: சுத்த சைவம், ரௌரவ ஆகம வித்யாபாதம் - சங்கதமும் தமிழும்) அவர்கள் உரையாற்றவிருக்கிறார். எனவே அடியார் பெருமக்கள் அனைவரும் கலந்து கொண்டு, மெய்யறிவு பெற்று உய்திட, விழா ஏற்பாட்டுக் குழுவினர் அழைத்து நிற்கின்றனர்.

**திருச்சிற்றம்பலம்**

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில் மூன்றாம் ஆண்டு சங்குநீரட்டு (08-04-2025)








# உலகின் முதல் சிவன்கோயில் உத்தரகோசமங்கை திருக்குடநீராட்டு அரன்பணி அறக்கட்டளை திருப்பணிக்கு மாபெரும் பங்களிப்பு




உலகின் முதற் சிவன்கோயில் என்று போற்றப்படும், இராமநாதபுரம் உத்தரகோசமங்கை சிவன் கோயிலின் திருக்குட நன்னீராட்டு 15 வருடங்களுக்கு பின்னர், கடந்த பங்குனித் திங்கள் 21 ஆம் நாள் (4-4-2025), வளர்பிறை எழுமைப் பிறை நாளும், மிருகசீரிடம் விண்மீனும் கூடிய, வெள்ளிக்கிழமை அன்று பத்தி வெள்ளம் பெருக சிறப்பாக நடைபெற்றது.

இந்தக் குடநீராட்டினை முன்னிட்டு, திருப்பணி வேலைகள் பல ஆண்டுகளாக நடைபெற்று வந்தன. பலரும் இதற்கு அவரவர் தம் அளவிற்கு நிதியுதவிகள் நல்கினர். குறிப்பாக கோவை அரன்பணி அறக்கட்டளை மாபெரும் பங்களிப்பினை இந்த இறைபணிக்கு நல்கியிருந்தனர்.

அரன்பணி அறக்கட்டளையினால் கோயிலில், மரகத நடராசர் சந்நிதியில் பொற்கூரை வேய்யப்பட்டது, தங்கத்தினாலான பொன்னூசல் செய்யப்பட்டது அத்துடன் மங்களநாதர், மங்களநாயகி மற்றும் மரகத நடராசர் கருவறை நிலைக்கால்களுக்கு தங்கக் கவசம் இடப்பட்டது.

அரன்பணியின் பெரும்பணியால், அத்துடன் அனைத்துச் சந்நிதிகளிலும் புதிய கொடிமரங்கள் அமைக்கப்பட்டன. இராசகோபுரங்களின் நுழைவு வாயில்களில் கருங்கல் தளம் அமைக்கப்பட்டதுடன், மேற்கு நுழைவாயில் புதிதாகத் திறக்கப்பட்டது. அம்மையின் இராசகோபுரத்தில் இருந்து சந்நிதி வரை நடைபாதைக்கான கூரைகள் அமைக்கப்பட்டன. திருக்கோயிலுக்கான புதிய மரக்கதவுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

நந்தி மண்டபம், அம்மை சந்நிதி மற்றும் நடை பாதையில் உள்ள தூண்களை பழமை மாறாமல் இருக்கவேண்டி கடுக்காய், மணல், சுண்ணாம்பு மற்றும் வெல்லம் சேர்த்து கலவை ஆக்கி புதுப்பிக்கப்பட்டு, பன்னிறம் தீட்டப்பட்டுள்ளது.

அம்மை மற்றும் ஆடல்வல்லான் சந்நிதிகளின் தகரக் கூரைகள் நீக்கப்பட்டு புதிய கற்றளி மண்டபங்கள் அமைக்கப்பட்டன. அத்துடன் அம்மை சந்நிதிக்கு தெற்குப் புறம் இருந்த பழைய தூண்கள் நீக்கப்பட்டு புதிய கற்தூண்கள் நிறுவப்பட்டு மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் கருவறை சந்நிதி முற்றிலுமாக கருங்கல்லில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கோயிலின் அக்கினி தீர்த்தம் தூர்வாரப்பட்டது. மேலும் ஆயிரம் இலிங்க சந்நிதியும் திருப்பணி செய்யப்பட்டது.

இப்படி பல சிவத்தலங்களில் திருப்பணி ஆற்றி வரும் அரன்பணி அறக்கட்டளைக்கு எம்மாலான உதவிகளை தொடர்ந்து செய்வோம். மன்னர் காலங்களில் எவ்வாறு கோயில் திருப்பணிகள் நடந்தனவோ, அவ்வாறே எங்கள் காலத்திலும் செய்வோம். சைவ நன்னெறி தான் தழைத்தோங்க எம்மாலான பணிகளை செய்வோம்.

# உலகின் முதல் சிவன் கோயில் எனப்போற்றப்படும் அருள்மிகு உத்தரகோசமங்கை திருக்குடநீராட்டு



# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**பொது நூல் சிறப்பு நூல் என்னும் பாகுபாட்டினைத் தூல அருந்ததி நியாயத்தால் எவ்வாறு சைவசமயம் விளக்கு கின்றது?**

தூல அருந்ததி முறைமையால் உணர்த்துவதற்கே பொது, சிறப்பு என்னும் நூல் பேதங்கள் சைவசமயத்தில் பேணப்படுகின்றது. ஏனெனில், உயிர்கள் பக்குவத் தரா தரத்தால் படிப்படியாகவே அறிவைப் பெற்று உயரும் என்பதனால், படிநிலையில் பக்குவப்பட்டு உயர்ந்து வரும் தன்மைக்கு ஏற்ப (சோபான முறையின் அறிந்துவரும் தன் மைக்கு ஏற்ப) தூல அருந்ததி நியாயமாக உணர்த்த வேண்டிய தேவை உண்டு. சிறப்பு நூலே போதும் என்பது அபக்குவ உயிர்களைப் பக்குவப்படுத்துவதற்குரிய படிநிலையை ஒழிக் கும் இடரையே உருவாக்கும். எனவேதான், தூல அருந்ததி முறைமையால் உணர்த்துதற்கு பொது நூல்களும் வேண்டப் படுவதாகவுள்ளது.

ஷதூல அருந்ததி நியாயம் என்பது, அருந்ததி விண் மீனை அறியாதவனுக்கு அருந்ததி விண்மீனைக் காட்டும் முறைமையாகும். அருந்ததி விண்மீன் மிகவும் நுண்ணியது. அதனைக் காண்பது மிகவும் கடினம். எனவே, ''அதோ பார் அருந்ததி விண்மீன்'' என்று அந்த அருந்ததி விண் மீனுக்கு மிக அருகில் விளங்கும் பெரிய விண்மீனாகிய வசிட் டர் விண்மீனை முதலில் சுட்டிக்காட்டி வசிட்டர் விண் மீனையே அருந்ததி விண்மீனாகக் காணச் செய்வர். அதன் பிறகு, அதனைக் கண்ட களிப்பில் இருக்கும்போது, **"அஃது அருந்ததி விண்மீன் அன்று அஃது வசிட்டர் விண்மீனா கும்அதற்கு அருகில் மிக நுண்ணியதாகவுள்ள விண்மீனே அருந்ததி விண்மீன் எனப்படும்."** என்று சுட்டிக்காட்டி, அருந்ததி விண்மீனை கண்டு இன்புறச்செய்வர்.

**"பழக்கப்படாத கண்ணால் அருந்ததி விண்மீனைக் காண்பது கடினம்"** என்று முதலிலேயே கூறினால், பலரும் முயற்சி செய்யாது ஒழிவர். அதனைத் தவிர்த்தற்பொருட்டு, முதலில் மிகப்பருமனாகத் தெரியும் வசிட்டர் விண்மீனையே அருந்ததி விண்மீன் என்று சுட்டிக்காட்டி, அதனைக் கண்ட தும் **"அஃதன்று அதற்கு அருகில் உள்ள நுண்மையான விண் மீனே அருந்ததி"** என்று உணர்த்துதல் வழக்கு. இவ்வழக்கு உணராதோர், அருந்ததி விண்மீனைக் காண்பது கடினம் என்று ஆரம்பதில் கூறி, அதனைக் காணவேண்டும் என்னும் ஆவல் உடையவர்களுக்கு அவநம்பிக்கை கொள்ளச்செய்து, முயற்சிப்பதற்குரிய ஆவலையே கெடுத்துவிடுவர். எனவே தான், தூல அருந்ததி நியாயம் என்பது அபக்குவ உயிர் களும் உண்மையை அறிந்து உயர்வதற்கு வேண்டப்படுவ தாகின்றது. எனவே, தூல அருந்ததி முறையில் பருமனா கத் தெரியும் வசிட்டர் விண்மீனையே அருந்ததி விண்மீன் என்று சுட்டும் முறைமை பொதுவென்றும், அதன் பிறகு, **"இஃது அருந்ததி விண்மீன் அன்று இஃது வசிட்டர் விண்மீன் இதற்கு அருகிலுள்ள நுண்மையான விண்மீனே அருந்ததி விண்மீன்"** என்று உள்ளதை உள்ளபடி உணர்த்துதல் சிறப்பு என்றும் கூறப்படும்.

**பொது நூல்களில் அபரம் பரம் உண்டா?**

ஒரு நூலிலேயே பொது (அபரம்), சிறப்பு (பரம்) என்று பகுதிகள் விளங்குவதும் உண்டு. ஒருவகை நூல் தொகுதிக் குள்ளும் பொது நூல்கள் (அபரநூல்கள்). சிறப்பு நூல்கள்(பரநூ ல்கள்) என்னும் பகுப்புக்கள் கொள்ளப்படுவதும் உண்டு.

பிறமத நூல்களெல்லாம் பொது நூல்களில் மிகுந்த அபரமாகவே கொள்ளப்படும். இதிகாசத்திலும் புராணம் பரமானது. அஃதாவது இதிகாசத்திலும் புராணமே சிறப் பானது. புராணத்திலும் வேதமே பரமா னது. அஃதாவது புராணத்திலும் வேதமே சிறப்பானது. எனவே, பொது நூல் என்று கூறும்போது வேதத்தையே சிறப்பாகக் குறிக்கும்.

**"வேதம் நான்கும் வேதாங்கம் ஆறும் நியாயம் மீமாஞ்சை மிருதி புராணம் என்னும் உபாங்கம் நான்கும் ஆகிய பதி னான்கு வித்தைகளுள்ளும் வேதமே மேலானது வேதத்துள்ளும் உருத்திரை காதசினி மேலானது அதனுள்ளும் ஐந்தெழுத்து மேலா னது; அதனுள்ளும் சிவ என்னும் இரண்டெழுத்தே மேலா னது. இவ்வாறு சிவதத்துவ விவேக விருத்தியிற் கூறப்பட்டது."**- பெரியபுராண சூசனத்தில் நாவலர் பெருமான்.

பொது நூல்களிலில் வேதமே சிறப்பு (பரம்) என்பதும், வேதத்தில் திருவுருத்திரமே சிறப்பு என்பதும், திருவுருத்தி ரத்திலும் திருவைந்தெழுத்தே சிறப்பு என்பதும், திருவைந் தெழுத்திலும் சிவ என்னும் எழுத்துக்களே சிறப்பு என்ப தும் அப்பய்ய தீட்சிதர் செய்த சிவ தத்துவ விவேக விருத்தி என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது என்பதனை நாவலர் பெருமான் உதாரணம் காட்டி, பொது நூல்களிடையே உள்ள தாரதம்மிய (இறக்க ஏற்ற) வேறுபாட்டையும், வேதத்தினுள் எப்பகுதி ஏனைய வேதப்பகுதிகளிலும் பரமாக விளங்கு கின்றது என்பதனையும் உணர்த்துகின்றார்.

வேதத்தில் நான்கு பகுதிகள் உண்டு. சம்கிதை (மந்திரம்), பிராமணம், ஆரண்யகம், உபநிடதங்கள் என்பவையே அந்நான்கு பகுதிகளுமாகும். இந்நான்கு பகுதிகளையும் அடக்கிக் கர்ம காண்டம் என்றும் ஞான காண்டம் என்றும் இருவகையாகப் பிரிக்கலாம். இதில், ஞான காண்டம் என்பது உபநிடதங்களாகும். ஏனையவை கர்ம காண்டத்தில் அடங்கும். வேதங்களில் ஞானகாண்டமே பரம் என்றும், கர்ம காண்டம் அபரம் என்றும் கூறப்படும்.

நாவலர்பெருமான் வேதம் என்று பொதுவிற் குறிப்பிட் டது கர்மகாண்டத்தையேயாகும். ஏனெனில், வேதம் என்று வேதத்தின் கர்ம காண்டமே சிறப்பிக்கப்படும் என்பதும், வேதத்தின் ஞானகாண்டம் வேதாந்தம் என்று சிறப்பிக் கப்படும் என்பதும் சான்றோர் முடிவாகும்.

வேதத்தினுள் (கர்மகாண்டத்தில்) திருவுருத்திரப் பகுதியே உயர்வென்று கொள்ளப்படுவதுபோல், வேதத்தின் ஞான காண்டத்திலும் பர அபர வேறுபாடுகள் உண்டு.

**"உபநிடதங்களினும் சுபாலம் முதலிய உபநிடதம் உலகம் தோன்றி ஒடுங்கும் முறைமையும், தோற்ற ஒடுக்கத் திற்கு ஒரு கருத்தா உண்டு என்னும் மாத்திரையும் போல்வன உணர்த்துதலின் பொது எனப்படும். சாந்தோக்கியம் முதலிய உபநிடதம் இருவகையும் கூறுதலின் பொதுவும் சிறப்பும் ஆம். அதர்வசிகை,அதர்வசிரம்,சுவேதாச்சுவதரம்,கைவல்லியம் முதல- ிய உபநிடதங்கள் முத்திநிலையே பற்றிச் சாதகமும் பயனும் கூறுதலின் உண்மை எனப்படும். ஆகலான், அதர்வசிகை முதலிய உபநிடதப் பொருள்பற்றிச் சுபாலம் முதலிய உபநிடதங்களு- க்குப் பொருள் கொள்வது அன்றிச், சுபாலம் முதலியவற்ற- ின் பொருள்பற்றி அதர்வசிகை முதலியவற்றிற்குப் பொருள் கோடல் பொருந்தாது என்பது நுண் அறிவான் உணர்ந்து கொள்க."** - சிவஞானமாபாடியம் (சிவஞானமுனிவர்)

திருச்சிற்றம்பலம்

# சிவபூமியில் சிவனைத் தேடி

## மட்டக்களப்பு மயில் தங்கிய மலை நந்தீச்சரர் கோயில்



### திருக்கோயில் அமைவிடம்

ஈழத்துக் கரையோர மாவட்டங்களில் எழில் கொஞ்சும் இயற்கையும் எண்ணிலியான வழிபாட்டுக் கோயில்களையும், தமிழர்களின் தனித்துவமான பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்கும் மட்டக்களப்புத் தேசத்தில், ஏறாவூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட படுவான்கரைப் பிரதேசத்தில் வாத்திரவெட்டை எனும் இடத்தில் மயில் தங்கிய மலை என்ற உயர்ந்த குன்றில் இச்சிவன் கோயில் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு வந்தாறுமூலை, மாவடிவேம்பு, சித்தாண்டி ஆகிய மூன்று பிரதேசங்களினூடாகவும் பயணிக்கலாம். வந்தாறுமூலை அம்பலத்தடி முனையிலிருந்து மயிலவட்டவான் ஊடாக ஏறத்தாழ 12 கி.மீ தூரத்தில் இம்மலைச் சிவன் கோயிலுக்குச் செல்லலாம் அல்லது சித்தாண்டியிலிருந்து மேற்குப் புறமாக ஓடும் சந்தணமடு ஆற்றைக் கடந்து வேலோடும் மலையில் இருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது.

கோயில்ச்சூழல் வனம், வயல், மலை, ஆறு என முல்லை, மருதம், குறிஞ்சி என எழில் கொண்டதாக விளங்குவதோடு யானை, மரை, மயில் முதலிய காட்டுவாழ் உயினங்களையும் இப்பிரதேசத்தில் காண முடிகின்றது. வாத்திரவெட்டை என்பது வேளாண்மைச் செய்கைக்குப் பெயர் பெற்ற இடங்களில் ஒன்று. அப்பிரதேசத்தின் உயர்வான மலைக்குன்றின் உச்சியில் மயில்கள் சென்று தங்குவதால் மயில் தங்கிய மலை என்றும் ஆதி காலந்தொட்டுச் சொல்லப்பட்டும் வருகின்றது.




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


### மயில் தங்கிய மலை - நாகரினத்தின் பிரதேசம்

மட்டக்களப்புப் பிரதசத்தில் இயக்கரும் நாகரும்ஆதி காலந்தொட்டு வாழ்ந்து வந்த சமூகங்கள்நாகர், இயக்கரோடு கலப்புற்று ஒரே சமூகமானார்கள். எல்லா இடங்களிலும் கூடி வாழ்ந்தார்கள். எல்லா நகரங்களிலும் ஆட்சி புரிந்தார்கள் என்ற குறிப்பை மட்டக்களப்புப் பூர்வ சரித்திர நூலில் கண்டுகொள்ள முடிகின்றது. இக்குறிப்பு ஒரு கட்டுக்கதையாகப் பார்க்கப்பட்டு வந்த சூழலில் கிழக்கிலங்கையில் அண்மைக் காலம் முதல் கண்டுபிடிக்கப்பட்ட பிராமி எழுத்துருவம் பொறிக்கப்பட்ட தொல்பொருட் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அக்கதை நம்பகமான தரவு என்பது உறுதியாகியுள்ளது.

மட்டக்களப்புத் தேசத்தில் சூரியன் எழும். எழுவான் பகுதிகளிலும், சூரியன் மறையும் படுவான் கரைப் பிரதேசங்களிலும் நாகர் சமூகத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்துள்ளது. இவர்களின் காலத்தை கி.மு. 3 ஆம் நூற்றாண்டு எனக் கணிக்கலாம். குறிப்பாக, வந்தாறுமூலை அதனை அண்டிய அயலூர்களிலும் நாகர்களைக் குறிக்கும் தொல்பொருட் சின்னங்கள் ஏராளம் கிடைத்துள்ளன. வேலோடிய மலை, மயில் தங்கிய மலை, குசலான் மலை, குடும்பி மலை, தாந்தா மலை ஆகிய மலைகள் படுவான்கரைப் பிரதேசங்களிலுள்ளவை. இப்பிரதேசங்களில் ‘வேள்’ என்ற பதவிப் பெயர் பொருந்திய நாகர் குலச் சிற்றரசர்கள், அநுராதபுரத்தில் ஆதிகாலத்தில் நாகர் குலத்தோடு தொடர்புடைய சில அரசர்களும் ஆட்சி புரிந்திருந்தனர்.

வந்தாறுமூலை, கல்லடிச்சேனை, நீர்முகப்பிள்ளையார் தரிப்பிடம், திருமால் கோயில் ஆகிய இடங்களில் வேள்ணாகன் அவன் மகன் வேள் கண்ணன் என்ற பெயர் பொறிக்கப்பட்ட சிற்றரசர்களின் ஆட்சி நடைபெற்றிருக்கின்றது. வேலோடும் மலையில் அம்மலை-யை அண்டிய நாகர் மலையில் மகாநாகன் என்ற பெயர் பொறிக்கப்பெற்ற பாறைச் சாசனத்தினூடாக அங்கு அநுராதபுரத்தை ஆட்சி புர-ிந்த நாக அரசன் ஒருவன் ஆட்சி புரிந்திருப்பது நம்பகமாகின்றது. ஏனெனில், அங்கு நாகருக்குரிய இராசதானி இருந்தமைக்குரிய தூண் தாங்கும் கற்கள், தூண் பாகங்கள், கலவோடுகள், நாக சிற்பம் பொருந்திய கல் என்பன சான்று பகர்கின்றன.

வேலோடும் மலையை அண்டிய மலையாக விளங்குவது மயில் தங்கிய மலையாகும். அம்மலையில் இருந்து பார்த்தால் இம்மலையின் எழில் சிறப்பாகத் தென்படும். இம்



மலையும் நாகர் இனத்துடன் தொடர்புடையது. நாகரின் தொழிலான வேளாண்மை இன்றும் அங்கு தொடர்கின் றது. இங்குள்ளவர்கள் வேளாண்மை செய்யும் பகுதியை வாத்திரவெட்டை என்று அழைக்கின்றனர். வேலோடிய மலையில் நாகராசன் முடி சூடி ஆட்சி புரிந்தான். இதற்கு அங்கு இன்றளவும் காணப்படுகின்ற நாகராசன் கல் நான்றா கும். இம் மன்னனே வாத்திரவெட்டையில் உள்ள மலைக்கு மயில் தங்கிய மலை என்று பெயரிட்டான் என்று இப்பிர தேசவாசிகள் செவி வழியாகக் கூறிக் கொண்டு வருகின்றனர்.

### ஆதி காலத்துச் சிவன் கோயில்

வேலோடிய மலைப் பிரதேச நாகராச மன்னன் தனது பரிபாரங்களுடன் வாத்திரவெட்டையினை ஊடறுத்துச் செல்லும் போது, மயில்கள் குறிப்பிட்ட மலையின் ஒரு பகுதி யில் சென்று, இறகுகளை விரித்து நிற்பதையும் அவ்விடத் தில் கூவி ஆடுவதையும் அவதானித்து அவ்விடத்தை மயில் தங்கும் மலை என்று பெயரிட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆடுமாடு மேய்க்க வருபவர்கள் மழைக்கும், வெயிலுக் கும் ஒதுங்கும் இடமாகவும் இம்மலை விளங்கியுள்ளது. ஒரு நாள் மழை பெய்த பொழுது, மயில் ஒன்று மலையின் ஒரு குன்றுப் பகுதியில் தோகையை விரித்துக் கொண்டிருக்கும் காட்சியைக் கண்ணுற்ற ஆடு மேய்க்கும் சிறுவர்கள் அவ்விடம் சென்று நோக்க அங்கு ஒரு சிவலிங்கம் இருப்பதைக்கண்டு திகைப்புற்று ஊராரிடம் தெரிவித்து அச்சிவலிங்கத்திற்குப் பூசை செய்து வரலாகினர் என்பது இங்குள்ள ஊர்வாசிகளின் செவிவழிக் கதையாகும். நாளடைவில் இம்மலை சிவனாரின் இருப்பிடமாகியது. இதை உணர்ந்த முனிவர்களும், சித்தர் களும் இம்மலைக்கு வந்து தவம் செய்து சென்றுள்ளனர்.

ஈழத்துப் போரிடர் காலத்தில் இவ்விடம் பூசையின்றி வெறிச்சோடி, காடு வளர்ந்து, யானைகள் உலாவும் இட மாகிற்று. போர் முடிவுற்ற காலத்தில் இங்குள்ள பிரதேச வாசிகள் காடகற்றி அவ்விடத்தில் சிவலிங்கம் ஒன்றை அமைத்து வழிபாடு இயற்றி வந்துள்ளனர்.

### நந்தீச்சரர் எனும் திருப்பெயர் பெற்ற சிவன் கோயில்

2025 ஆம் ஆண்டு பங்குனித் திங்களில் இச்சிவன் கோயிலுக்கு தெய்வத்தமிழிலே கடவுள் மங்கல நன்னீராட்டு செய்யப்பட்டு, மயில் தங்கிய மலை நந்தீச்சரர் கோயில் என்ற திருப்பெயரும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு அருள் சுரக்கும் மூர்த்தி நந்தீச்சரர் என்றும் அம்மை ஆதிபரமேசுவரி என்றும் போற்றப்படுகின்றனர். தலமரமாக வன்னிமரமும் அருகில் தீர்த்தத் தடாகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. பரிபாரத் தெய்வங்களாகப் பிள்ளையாரும் குமாரத்தன், நாகதம்பிரான், பைரவர் ஆகிய தெய்வங்களும் அவற்றுக்கு சிறு கோயில் களும் நிறுவப்பட்டுள்ளன.

ஆதியில் வழிபட்டு வந்த சிவலிங்கமும் நந்தியும் கோயி லுக்கு அருகாமையில் நிறுவப்பட்டுள்ளது. விமானத்துடன் சேர்ந்த கருவறை, மண்டபம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டு நான்கரை அடி உயரமான சிவலிங்கம் கருவறையினுள் நிலைநிறுத்தப்பட்டிருப்பது மிகவும் சிறப்பாகும். மலை முகட்டின் குன்றின் மீதும் பரமேசுவரிநாதர் என்ற திருப் பெயருடன் ஒரு சிவலிங்கமும் நிறுவப்பட்டு நாள்தோறும் பூசை செய்யப்பட்டு வருகின்றது. இவை தவிர மலையின் ஓர் சாரலில் ஆறு சிவலிங்கங்களும் மலையின் பரவலாக இருக்கும் சிறு குன்றுகள் இரண்டிலும் சிறு சிவலிங்கங்



களும் நிறுவப்பப்பட்டுள்ளன. இவ்வாறு மயில் தங்கிய மலை சிவலிங்கப் பூமியாகக் காட்சியளிக்கின்றது.

முதற் குடமுழுக்குப் பூசை தமிழில் செய்யப்பட்டது. நாள் வழிபாடுகளும் தமிழில்தான் இடம்பெற்று வருகின் றது. செந்தமிழ் ஆகம முறைப்படி தேவார, திருவாசகம், திருமந்திரம் ஆகிய திருமுறைப் பாடல்களை ஓதியே அனைத் துக் கிரியைகளும் நடைபெற்று வருவதும் சிறப்பாகும்.

**“அறிவனே அமுதே அடி நாயினேன்**
**அறிவன் ஆகக் கொண்டோ எனை ஆண்டது**
**அறிவு இலாமை அன்றே கண்டது ஆண்ட நாள்**
**அறிவனோ அல்லனோ அருள் ஈசனே” - (திருச்சதகம்)**

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



பூத கணங்கள் திருவாரூரில் நெல்மலைகளைக் குவித்தல்

**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

**(திருமலைச் சருக்கம் நிறைவடைந்து, ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம் பகுதியில் சுந்தரர் புராணம் தொடர்கிறது.)**

### குண்டையூர் கிழவர் நெல் பெற்ற அற்புதம்

திருநாவலூரரை ஆட்சி கொள்ளும் அருளாளராய சுந்தர மூர்த்தி சுவாமிகள், திருவாரூரில் தங்கியிருந்து திருத்தொண்டத் தொகையை அருளிய பின்னர், உள்ளத்து எழுகின்ற மெய்யன்பினால் திருவாரூரை விட்டுப் பிரியாது அங்கு தங்கியிருக்கும் நாளிலே குண்டையூர்க் கிழவரென்னும் ஒரு வேளாளர், செந்நெல்லும் பொன்போன்ற நல்ல பருப்புஞ் சருக்கரையும் முதலிய பல பொருள்கள்களைப் பரவையார் மாளிகைக்குக் கொண்டு போய்க் கொடுக்கும் பணி பூண்டிருந்தார். அக்காலத்திலே மழை குறைந்து நிலவளஞ் சுருங்கினமையால் வன்றொண்டர் திருமாளிகைக்கு வேண்டிய அளவு நெல் எடுத்துக்கொடுக்க வியலாமைபற்றி வருந்தி உணவு கொள்ளாது அக்கிழவர் இரவில் துயிலும் போது சிவபெருமான் அவருக்குத் தோன்றி, **"நம்பியாரூரர்க்கு வேண்டிய நெல் உனக்கு இப்போது தந்தோம்"** என்றருளிச்செய்து நிதிக் கோமானை ஏவி அவ்வூர் முழுதும் நிறையும்படியாக நெல் மலையைத் தோற்றுவித்தார். விடிந்ததும் குண்டையூர்க் கிழவர் நெல்மலையைக் கண்டு பெருவியப்புற்றுத் திருவருளைப் போற்றிப் பரவையாரின் கணவரைக் கண்டு தொழுவான் சென்றனர். நம்பியாரூரரும் இறைவர் கட்டளைப் படி எதிர் செல்லக் குண்டையூர்க்கிழவர் அவரைக் கண்டு வணங்கி, **"நெடுநாளாக அடியேன் செய்துவந்த பணிக்குத் தடை ஏற்பட்ட காலைச் சிவபெருமான் தாமே நெல்மலையைக் கொடுத்தார் அது மனிதரால் எடுக்கும் அளவினதன்று் அஃது என்னால் ஆகத்தக்க பணியன்று"** என்று செப்பினார்.

அதனைக் கேட்ட திருநாவலூரரர் சிவபெருமானன்றோ உமக்கு நெல் கொடுத்தது? அஃது அப்பெற்றியாகத் தானிருக்கு மென்று நல்லன கூறிக், குண்டையூர் சென்று நெல் மலையைக் கண்டு வியப்புற்றுப் பரவையாரின் வீட்டிற்கு இந்நெல்லை எடுத்துக் கொண்டு போவதற்கு ஆளுஞ் சிவபெருமான்தான் தர வேண்டுமென்று பக்கத்திலுள்ள திருப்பதியான திருக்கோளிலிக்குச் சென்று பாடினார்.

# திருக்கோளிலி



நெல்மலைகளைத் திருவாரூரில் சேர்ப்பித்து அருளுமாறு வேண்டுதல்

**நீள நினைந்தடி யேனுமை**
**நித்தலுங் கைதொழுவேன்**
**வாளன கண்மட வாளவள்**
**வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெரு மான்குண்டை**
**யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்**
**ஆளிலை எம்பெரு மானவை**
**அட்டித் தரப்பணியே.**



குண்டையூரில் நெல்மலைகளைக் கண்டு அதிசயித்தல்

அப்போது சிவபெருமான் திருவருளால் **"பகற்பொழுது கழித்த பிற்பாடு நம் பூதங்கள் பரவைமனையின் மாத்திர மில்லாமல், திருவாரூர் நிறையும்படியாக நெல்லினைக் கொணர்ந்து சேர்க்கும்"** என்ற ஒரு மொழி எழுந்தது. உடனே திருவருளைப் போற்றித் தரையின்மேல் வீழ்ந்திறைஞ்சிப் பிற தலங்களையுந் தொழுது திருவாரூரையடைந்து புற்றி டங் கொண்டாரை வணங்கிப் புறம்போந்து பரவையார் திருமாளி கையை அடைந்தனர். ஆண்டுப் பரவையாரோடு இன்புற்றிருந்த காலை உமையொருபாகர் திருவருளால் பூதப்படைகள் தண்டையூரிலிருந்து நெல்மலையை எடுத் துக் கொணர்ந்து, பரவை மாளிகையிலுந் திருவாரூரிலும் நிறைவித்துப் பார்ப்பவர்களுக்கெல்லாம் ஒரு வியப்பான புதுமைக்காட்சியை நல்கின. விடியற்காலத்திலே அவ்வூரார் யாவருங் கண்டு, இவ்வளவு மிகுதியான நெல் எந்த உலகத் தில் விளைந்ததென்று இறும்பூதெய்திப் பரவையாருக்கு ஆளுடையநம்பி அளித்ததென உணர்ந்தார்கள். போக்குவரவு செய்ய இடமில்லாமல் நிறைந்திருப்பதைப் பரவையாருக்கு அவர்கள் அறிவிக்க, அவரும் **"அவரவர் மனையின் எல்லைக் குட்பட்ட நெல்லை அவரவர்களே எடுத்து வைத்துக் கொள்ளலாம்"** என்று பறையறை வித்தார். எல்லாரும் தங்கட்கு வேண்டிய நெல்லை எடுத்துப் பயன்படுத்தி மகிழ்ந்தார்கள்.

**திருச்சிற்றம்பலம்**

**ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணம் - (303 - 349)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# சொற்சிலம்பலம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | ■ | 02 | 03 |
| | ■ | ■ | ■ | ■ | 04 | | |
| 05 | | | 06 | | 07 | ■ | |
| | ■ | ■ | | ■ | | ■ | |
| | ■ | 08 | | ■ | | ■ | |
| | ■ | | | ■ | 09 | 10 | |
| ■ | 11 | | | ■ | ■ | | |
| 12 | | | ■ | 13 | | | ■ |

**இடமிருந்து வலம்**

*01.* நட்சத்திரங்களில் ஒன்று
*02.* அறிவிக்காமலே அறிவது
*04.* நீர் ஓட்டம் (குழம்பி)
*05.* சிலந்தி, யானை தொடர்புடைய சிவத்தலம் (திரும்பி)
*08.* முனிவர்களுக்கு அடைமொழி
*09.* நட்சத்திரங்களில் ஒன்று (திரும்பி)
*11.* திருக்கோயிலில் அனைவரும் இப்படி மதிக்கப்படுவர்
*12.* ஆனந்தமயமானது
*13.* காலப் பகுதியைக் குறிக்கும்

**மேலிருந்து கீழ்**

*01.* மெய்யியல் தத்துவங்களில் ஒன்று
*03.* நினைத்தாலே முத்தி தரும் சிவத்தலம்
*04.* மதியால் வெல்லலாம்
*06.* சாவகச்சேரி நகரில் அமையப்பெற்ற சோழர்கால சிவன் கோயில்
*07.* பெண்கள் அணிவது
*08.* இது தலை காக்கும்
*10.* அனைத்து உயிர்கள் மீதும் நாம் காட்ட வேண்டியது

பாடசாலை மாணவர்கள், மேலே உள்ள சொற்சிலம்பத்தை பிரதிசெய்து, அதனைப் பூர்த்தி செய்து, பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன், உங்கள் முழுப்பெயர், தொடர்பு இலக்கம், முகவரி என்பவற்றுடன் வங்கி கணக்கு விபரத்தையும் அனுப்பி வைக்கவும். வெற்றியாளர்களுக்கு 500/- ரூபாய் பணப்பரிசில் வழங்கப்படும்.

**அனுப்பவேண்டிய இறுதித் திகதி:**

**சித்திரைத் திங்கள் 19 ஆம் நாள் (02-05-2025)**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
+94 21 222 9722 | +94 70 770 1111

# அருள்மிகு திருவாரூர் தியாகராசப் பெருமான்















# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org



# புதியவற்றைத் தருக புத்தாண்டே!

பண்டைய காலத்தில் இருந்து தமிழர்கள் வானியல் பற்றிய மிக துல்லியமான அறிவினை பெற்றிருந்தார்கள். அந்த அறிவினைக் கொண்டு பருவ காலங்களைக் கணித்தும், ஆண்டு சுழற்சியை அறிந்தும் தம் வாழ்வியலைக் கொண்டு நடாத்தினார்கள். தமிழரின் வானியல் அறிவுக்குச் சான்றாக விளங்குவது சித்திரை புத்தாண்டு திருநாளாகும். நுட்பமான சூரிய நகர்வை அடிப்படையாகக் கொண்டு தமிழர்களால் நிறுவப்பட்ட இச்சித்திரைப் புத்தாண்டு, ஆண்டின் தொடக்கமாக மரபு வழி தமிழர் வரலாற்றில் பன்னெடுங்காலமாக இருந்து வருகின்றது. இடையில் சிலர் தை முதல் நாளே தமிழரின் புத்தாண்டு என்று தமக்குள் குழப்பம் கொண்டது சரியான வரலாற்றுப் பார்வை இன்மையினாலேயே ஆகும்!

எது எப்படி இருந்தாலும் பிறக்கப் போகும் சித்திரை புத்தாண்டு தமிழர்களுக்கு வாழ்வில் பல நல்ல விடயங்களை கொண்டு வர வேண்டும் என்கின்ற ஏக்கம் கலந்த ஆசை எம் எல்லோருக்கும் இருக்கின்றது. இலங்கை தேசத்துக்கான பாரத பிரதமரின் வருகையை தொடர்ந்து இங்கு இடம் பெறப் போகும் அரசியல் அடிப்படையான மாற்றங்களுக்கு மேலாக, சமயம் சார்ந்த மாற்றங்களை அறிந்து அதனை எமக்கு ஏற்ற விதத்தில் மாற்றிப் பெறவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. திருகோணமலை திருக்கோணேச்சரர் திருத்தலத்தை இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் மீண்டும் பொலிவுறும் வகையில் அதனை மீள்நிர்மாணம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது. அதற்கான நல்ல சூழல் உருவாகும் என்கின்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

கோணேச்சரநாதர் அமர்ந்து அருள் புரிகின்ற திருகோணமலை திருத்தலத்தின் திருமலையை வலம் வரக்கூடிய வாய்ப்பு இன்று இல்லை. எனவே மலையை முழுமையாக அடியார்கள் சுற்றி வலம்வரத்தக்க வகையில் பாதை ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டிய அவசியத்தை நாம் எல்லோரும் உணர்ந்து இருக்கின்றோம். இதனை விடவும் கோயில் சூழல் முற்று முழுதாக ஆன்மீகச் சூழலாக அமைந்து விளங்குவதை உறுதி செய்வதற்காக அங்கே அமைக்கப்பட்டு இருக்கின்ற வியாபார நோக்கத்தை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக நிலையங்களை அகற்ற வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. கோயிலை புனரமைப்புச் செய்கின்ற போது இவற்றையும் சேர்த்து கவனத்தில் கொள்ள வேண்டிய அவசியத்தை கோயில் அறங்காவல் உணர வேண்டும்!

ஏற்கனவே இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பெற்ற திருக்கேதீச்சர கோயிலின் சிற்ப வேலைபாடுகளில் பலர் பல குறைபாடுகளை சுட்டிக்காட்டி இருந்தமையை நாம் மனதில் கொண்டு, அவ்வாறு மீண்டும் நடைபெறாத வண்ணம் கைதேர்ந்த சிற்பச்சாரியார்களையும் மேற்பார்வையாளர்களையும் கொண்டு இப்பணி முன்னெடுக்கப்பட்டால் காலம் தோறும் கலை நயத்தோடு மலையில் மிளிரும் கோயிலை நாம் பெறலாம்!

குளக்கோட்ட மன்னன் உட்பட்ட பல மன்னர்கள் திருப்பணி செய்து அழகுற இருந்த திருக்கோணேச்சரர் திருக்கோயில் அந்நியராட்சி காலத்தில் அழிக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் எம்மவர்களின் முயற்சியினால் இன்றைய நிலை அடைய பெற்றது. ஆனாலும் இராணுவ உட்புகுதலாலும், அரசியல் உட்புகுதலாலும் அங்கு ஏற்படுகின்ற இடர்பாடுகளைக் களைந்து முழுமையாக சைவப் பேரொளி வீசத்தக்க வகையில் அக்கோயில் மீண்டும் அமைக்கப்பட வேண்டிய காலத்தின் தேவையை உணர்ந்து, எதற்கும் முன்னாயத்தமாகவே நாம் செயற்பட்டால், இந்திய அரசாங்கத்தின் உதவி கிடைக்கும் போது அதனை சிறப்பான முறையில் கையாள முடியும்.

எனவே பிறக்கப் போகின்ற இப்புதிய ஆண்டு, இந்த மண்ணில் வாழ்கின்ற சைவத் தமிழர்களின் வாழ்வில் பல புதிய விடயங்களைத் தந்து அவர்களின் வாழ்வு எழுச்சி அடையத் தக்க வகையில் அமைந்தால் அது நாம் எல்லோரும் செய்த தவ பயனே ஆகும்!

திருச்சிற்றம்பலம்

# மெய்ப்பத்தர்கள்பால் பரிவுடையார் எம்பிரானார் விறன்மிண்ட நாயனார்



செல்வி.
நவிசா ஈஸ்வரானந்தம்
கலைமாணி

நீங்கமறநிறைந்துவிளங்கும்பரம்பொருளின்அளப் பெருங்கருணையை இவ்வுலகிற்கு புரிய வைப்பதற்காக தாம் இறைவன் மீது கொண்ட தீவிர அன்பினால் செயற் கரிய செயலைச் செய்து இறையடி சேர்ந்த அருளாளர்களை வணங்குவதென்பது இன்று பலரும் மறந்த ஒரு வழிபாடாக மாறி வருகின்றது. அடியாரை வணங்கிய பின் இறைவனை வணங்கினால் இறைவனுடைய கருணை முழுமையாக கிடைக்கும் என்ற உன்னத வாழ்க்கைத் தத்துவத்தை தனது வாழ்வியல் அனுபவத்தின் ஊடாக இவ்வுலகிற்கு எடுத்துக் காட்டியவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் அடியாரை வணங்காது சென்ற சுந்தரரை சைவத்தில் இருந்து புறந்தள்ளியவர் சுந்தரருக்கு அருள் செய்த பரம்பொருளை சைவத்தில் இருந்து விலக்கி வைத்தவர் சைவ உலகிற்கு திருத்தொண்டத்தொகை என்ற நூல் பாட சந்தர்ப்பத்தை வகுத்துக் கொடுத்தவர் இன்று முதல் சிவபூதகணங்கள் அனைத்திற்கும் நீயே தலைவனாக இருந்து அவர்களை வழிநடத்துவாயாக என்ற ஒரு உன்னதமான 'கணநாதர் பேறாகிய' தலைமைப் பதவி சிவனால் வழங்கப்பட்ட பெருமைக்குரியவர்

**"விரிபொழில் சூழ் குன்றையார் விறமிண்டற்கு அடியேன்"**

என சுந்தரரமூர்த்தி நாயனாரால் போற்றிப் பாடப்பட்டவர் இத்தனை சிறப்புக்களும் பொருந்தியவராக பரசுராமதலம் எனச் சிறப்பிக்கப்படும் மலைநாடாகிய கேரளப் பகுதியின் திருச்செங்குன்றம் என்ற தலத்தை தனது தோற்றத் திருத்தலமாகக் கொண்டவர் விறமிண்ட நாயனார் ஆவார். சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்திலே,

**அப்பொற் பதியி னிடைவேளான்**
**குலத்தை விளக்க அவதரித்தார்**
**செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச்**
**சிவனார் செய்ய கழல்பற்றி**
**எப்பற் றினையும் அறஎறிவார்**
**எல்லை தெரிய ஒண்ணாதார்**
**மெய்ப்பத் தர்கள் பாற் பரிவுடையார்**
**எம்பி ரானார் விறன்மிண்டர்.**

**(திருத்தொண்டர் புராணம்,494)**

என இவருடைய தோற்ற வரலாற்றை தெளிவாகவும், சுருக்கமாகவும் பாடியுள்ளார்.

வேளாள மரபினைச் சேர்ந்த இவர் தானும் வாழ்ந்து பிறரையும் வாழ்விக்ககூடிய உழவுத்தொழிலை தனது வாழ்வா






தாரமாகக் கொண்டு வாழ்ந்தார். அடியார்கள் மீது அதீத பத்தி கொண்ட இவர் தினமும் உழவுத்தொழிலில் கிடைக்கும் சிறு ஓய்வு நேரங்களில் அருகிலுள்ள தலங்களுக்கு திருத்தல யாத்திரை சென்று அடியாரை வணங்கி பின் இறைவனை வழிபட்டு வருவதை தனது முதன்மைமிகு நாளாந்தக் கடமையாகக் கொண்டவர். அடியார்களின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கவும், என்றென்றும் அடியார் பெருமை நிலைத்திருக்கவும் இறைவன் மேற்கொண்ட திருவிளையாடலில் இவரை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார்.

ஒரு சமயம் பிறக்க முத்தி தரும் தியகேசராசப் பெருமான் எழுந்தருள் புரியும் திருத்தலமாகிய திருவாரூரிற்கு தல யாத்திரை சென்ற இவர், அடியார்கள் கூடி இருந்து இறைவன் பெருமை பேசும் தேவாசிரியர் மண்டபத்தில் அடியார்களுடன் உரையாடிக் கொண்டு இருக்கும் தருணத்தில் அங்கு சுந்தரமூர்த்தி நாயனார் வருகை தந்தார். இவர் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அருட்காட்சியின் பெருமையை உலகறியச் செய்தவர். ஆயினும் சுந்தரமூர்த்தி நாயனார் இறைவன் மீது கொண்ட தீவிர காதலால் அடியார்களை கவனியாது இறைவனிடம் ஓடோடிச் சென்றதால் இவருக்கு சுந்தரர் மீது கோபம் கொண்டார்.

**“திருத்தொண்டர்களுக்கு வன்றொண்டனும் புறம்பு அவனை ஆண்ட சிவனும் புறம்பு”**

சைவத்தின் பெருமையை உலகத்திற்கு சொல்ல வந்த சுந்தரமூர்த்தி நாயனார், அடியாரை வணங்காது சென்றதால் சைவத்திற்கு புறம், அத்தோடு சுந்தரமூர்த்தி நாயனாருக்கு கருணைகாட்டி அருள் செய்து, ஓலை கொடுத்து ஆட்கொண்டு, அழைத்த இடமெல்லாம் சென்ற பரம்பொருளையும் புறந்தள்ளுகின்றேன். திருவாரூருக்கு இனிச் செல்வதுமில்லை திருவாரூருக்குச் செல்லும் சிவனடியாரின் காலையும் வெட்டுவேன் என உறுதி பூண்டு வன்பத்தி கொண்டவராக ஆண்டிப்பந்தலில் தங்கியிருந்தார். இவருடைய பத்தியை உலகுக்குக்காட்ட விரும்பிய எம்பெருமான், சிவனடியார் போல் வேடங்கொண்டு திருவாரூர் செல்ல வழி கேட்ட போது, சிவனடியாரின் காலை வெட்ட துரத்திச் சென்றவர் அவரை அறியாது திருவாரூருக்குச் சென்று விட்டார். உடனே தனது காலை துண்டித்தார் அவ்வேளையில் சிவன் தனது உண்மை வடிவத்தை அருளி மறைந்தார்.

அன்றிலிருந்து தலம் தலமாகச் சென்று இறைவன் பெருமைகளை பாடி, வண்டாம்பளையை தனது முத்தித்தலமாகக் கொண்டு சித்திரைத் திருவாதிரை நன்னாளில் இறைவனடி சேர்ந்தார்.

**‘தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே’** எனும் ஔவையின் வாக்கிற்கிணங்க அடியவர் பெருமையை, இறைவனையே சிக்கெனப் பிடித்து வைத்திருக்கும் வல்லமையை அதனால் அவரை வழிபடுதலே இறைவனை வழிபடுதல் எனும் சங்கம வழிபாட்டை தந்து அதனையே முத்திக்கும் வழியாக்கிய பெருமைக்கு வழிகோலியவராக விறன்மிண்ட நாயனார் திகழ்கிறார் என்றால் மிகையில்லை.

**திருச்சிற்றம்பலம்**

**படம் - தேவராஜன் நடராஜன் அவர்களின் முகநூலில் இருந்து**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு உலகநாயகி உடனுறை இலட்சுமிபுரீசுவரர் - திருநின்றியூர் (திருநன்றியூர்)

# தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 19ஆவது திருக்கோயில் திருநின்றியூர் (திருநன்றியூர்)




**"காலன்வலி காலினொடு போக்கிக்கடி கமழும் நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே"**

திருமகள் வழிபட்டு நிலைபேறு எய்தியதால், இறைவன் 'இலட்சுமிபுரீசுவரர்' என்ற திருப்பெயர் கொண்டு உறையும் அற்புதத் தலமே திருநின்றியூர் அருள்மிகு உலகநாயகி உடனுறை இலட்சுமிபுரீசுவரர் திருத்தலமாகும்.

**அமைவிடம்: நாகப்பட்டினம், தமிழ்நாடு.**

வைத்தீஸ்வரன்கோயில் - மயிலாடுதுறை சாலையில் இடையில் உள்ள ஊர். மயிலாடுதுறையிலிருந்து 7 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்: இலட்சுமிபுரீசுவரர், மகாலட்சுமீசர்.**
**இறைவியார் திருப்பெயர்: உலகநாயகி**
**கோயில் மரம்: விளாமரம்**
**தீர்த்தம்: இலட்சுமி தீர்த்தம்**
**வழிபட்டோர்: சம்பந்தர், அப்பர், சுந்தரர், சேக்கிழார், இலக்குமி, பரசுராமர், அகத்தியர் முதலியோர். பாமாலை: சம்பந்தர், அப்பர், சுந்தரர்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு**
**பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்**
**காலன்வலி காலினொடு போக்கிக்கடி கமழும்**
**நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. (1-18)**

### திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம்

**கொடுங்கண் வெண்தலை கொண்டு குறைவிலைப்**
**படுங்க ணொன்றில ராய்ப்பலி தேர்ந்துண்பர்**
**நெடுங்கண் மங்கைய ராட்டயர் நின்றியூர்க்**
**கடுங்கைக் கூற்றுதைத் திட்ட கருத்தரே. (5-23)**

### சுந்தரர் அருளிய திருப்பதிகம்

**அற்றவ னாரடி யார்தமக்**
**காயிழை பங்கினராம்**
**பற்றவ னாரெம் பராபரர் என்று**
**பலர்விரும்பும்**
**கொற்றவ னார்குறு காதவர்**
**ஊர்நெடு வெஞ்சரத்தால்**
